**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**

**Crl.M.P. 4541/2025.**

**புகார்தாரர் – திரு. மதன் சக்கரவர்த்தி**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. மதன் சக்கரவர்த்தி | ஜாதி | |
| தந்தை பெயர் | திரு. அமாவாசை | தொழில் | விவசாயம் |
| கிராமம் | பீசி பட்டி | சமயம் | |
| தாலுக்கா மற்றும் மாவட்டம் | | வயது | 34/2026. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.06.2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).**

**<u>அரசுத் தரப்பு முதல் விசாரணை</u>:–**

1) நான் தற்போது பீசி பட்டியில் குடியிருந்து வருகிறேன். கடந்த 24.04.2024 ஆம் தேதி நான் உசிலம்பட்டி, டி அம்பாசமுத்திரத்தில் உள்ள என் தோட்டத்தில் இருந்தேன். அப்போது இருசக்கரவாகனத்தில் இருவர் வந்தனர். என்னிடம் நான் யார் என்ன விவரம் என விசாரித்தார்கள், அந்த இருசக்கரவாகனத்தில் வந்தவர்கள் என்னை பிடித்து கொண்டு ஒரு போலீஸ் வேன் வரசொல்லி என்னை மதியம் 02.00 மணிக்கு அந்த வேனில் ஏற்றினார். அவர்கள் காவலர்கள் என்று என்னால் அடையாளம் கண்டுகொள்ளமுடியவில்லை, அவர்கள் சீருடை அணியவில்லை. அந்த வேனில் ஏற்றி என்னை எனது தோட்டத்திலிருந்து கிழக்கு திசையில் உள்ள எனக்கு சொந்தமான கல்யாண மண்டபத்தில் வாசலில் 10 நிமிடங்கள் நிறுத்தி வைத்தனர்.

2) இரண்டு இருசக்கரவாகனத்தில் வேனில் பின் தொடர்ந்து 2 போலீசார் ஒவ்வொரு பைக்கிலும் வந்தனர். எனது மண்டபத்தில் வைத்து 2 போலீசாரும் வேனில் ஏறிக்கொண்டனர். அதன் பின்னிட்டு கல்யாண மண்டபத்தின் மேற்கு திசை நோக்கி வேன் புறப்பட்டு தேனி எஸ்.பி ஆபிஸ் மெயின்ரோட்டில் 30 நிமிடங்கள் வேன் நிறுத்தி வைக்கப்பட்டது. அங்கிருந்து பீசிபட்டி போலீஸ் ஸ்டேசன் அழைத்து வந்தனர். பீசிபட்டி காவல்நிலைய முதல் தளத்திற்கு அழைத்து சென்றனர். அங்கு காவல் ஆய்வாளரும், சிறப்பு சார்பு ஆய்வாளரும் இருந்தார்கள். குற்றஎண். 169/2024 மற்றும் 170/2024 வழக்குகளில் சம்மந்தப்பட்ட எனது அண்ணன் எங்கு என்று விசாரித்தனர். சண்டை

நடந்த இடத்தில் நான் இல்லை என்று சொன்னேன். ஆளும்கட்சி கூறிய படி நடக்கவேண்டும் என்றும் எனது அண்ணன் அ.ம.மு.க கட்சியில் பீசிபட்டி சேர்மனாக இருந்தார், அவரை பதவி விலக சொல்லுமாறு என்னிடம் தெரிவித்தார்கள் இல்லை எனில் என் குடும்பத்தார் மீது இது போன்று வழக்கு தாக்கல் செய்து தொந்தரவு செய்வோம் என்று கூறினார்கள். எனது முட்டியில் ஏற்கனவே ஏற்பட்டிருந்த காயத்தின் காரணமாக என்னால் தரையில் அமரஇயலாது என்று கூறினேன். அப்போது ஆய்வாளரும், சார்பு ஆய்வாளரும் என்னை மிரட்டி அடிக்க வந்து உடனே உட்காருமாறு கூறினர். நான் சிரமப்பட்டு உட்கார்ந்ததில் எனக்கு அசௌரியம் ஏற்பட்டு எனக்கு வியர்க்க தொடங்கிவிட்டது. என்னை கானவிலக்கு மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர். அங்கு முதலில் கொரேனா டெஸ்ட் எடுத்தனர். அதன் பின்னர் இரத்தபரிசோதனை செய்ததில் அதிகமாக இருந்ததால் ஏதாவது பிரச்சனையா என்று கேட்டனர். அதன் பிறகு ஈசிஜி எடுத்தனர். இதயத்துடிப்பு 45 முதல் 50 இருப்பதால் ரிமண்ட்டிற்கு பரிந்துரைக்க இயலாது என்று கூறிவிட்டனர். அங்கிருந்து என்னை மதுரை  அரசு மருத்துமனைக்கு அன்று இரவே என்னை அனுப்ப வைத்தனர். அப்போது என் குடும்ப உறுப்பினர்களை தொடர்பு கொள்ள இயலவில்லை. மதுரையில் 2 நாட்கள் வைத்திருந்து Remand ற்கு பரிந்துரைக்குமாறு கூறினார். எதிரி பாலசுப்பிரமணியன் பொய்யான தகவலை Remand Report ல் தெரிவித்துள்ளார். 27.04.2024 தேதியில் ஆண்டிபட்டி நீதிபதி மாலை 5 மணிக்கு மதுரை அரசு மருத்துவமனைக்கு வந்தார். மருத்துவ ஆவணங்களை பரிசோதித்து விட்டு நீதிமன்ற காவலுக்கு அனுப்பவில்லை. மேலும் உடல்நிலை சரியானதும் ஜாமீன்தார் ஆஜர் படுத்துமாறு கூறிவிட்டு சென்றுவிட்டார். மருத்துவர்களிடம் முறையாக தெரிவிக்காமல் என்னை அப்படியே மருத்துவமனையில் விட்டுவிட்டு சென்று விட்டனர். மருத்துவர்கள் என்னை விடுவிப்பு செய்ய இயலாது என கூறினர். அதன் பின்னர் அருகில் இருந்த நோயாளியிடம் கைப்பேசி மூலம் என்வீட்டிற்கு தகவல் கொடுத்து எனது அப்பா மருத்துவமனைக்கு வந்த பின்னர் 29.04.2024 ல் மாலை 4 மணிக்கு Discharge ஆனேன். அதன் பின்னர் தேதி வெங்கடேஸ்வரா மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன். உடல்நிலை சரியான பின்னர் ஜமீன்தார் ஆஜர் செய்தேன். எதிரி பாக்கியம் தாக்கல் செய்த Remand அறிக்கையில் என்னை ஆண்டிபட்டியில் வைத்து கைது செய்ததாக

தெரிவித்துள்ளார் நான் அந்த சமயத்தில் மதுரை உசிலம்பட்டியில் உள்ள என் தோட்டத்தில் இருந்தேன். Remand அறிக்கையில் முன்வழக்குகள் என தெரிவித்துள்ள வழக்குகளிலிருந்தும் நான் விடுதலை செய்யப்பட்டுள்ளேன். மேலும் Remand அறிக்கையில் என்னால் பிறர் உயிருக்கு ஆபத்து என பொய்யாக தெரிவித்துள்ளார். நான் உடல்நல குறைவால் பாதிக்கப்பட்டு இருக்கையில் என்னால் பிறர் உயிருக்கு ஆபத்து என பொய்யாக தெரிவித்துள்ளார். 24ம் தேதி என்னை கைது செய்து 27ம் தேதி வரை என்னை சட்டவிரோத காவலில் வைத்துள்ளனர். எனக்கு எந்த அடிப்படை வசதிகளும் செய்து தரவில்லை. அதனால் எதிரிக்கு அழைப்பாணை அனுப்பி வழக்கை விசாரணை செய்து எதிரிக்கு தகுந்த தண்டனை வழங்கும்படி கேட்டுகொள்கிறேன்.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.**

BHARATHA DEVI

Digitally signed by BHARATHA DEVI
Date: 2026.06.23 15:19:39 +0530

**நீதித்துறை நடுவர்,**
**தேனி.**